1980 ஜூலை 29]

DR. K. SOURIRAJAN: How long it will take?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

DR. K. SOURIRAJAN: 'Araichi' means, it may take even 20 years. There is no use at all. How long it will take? Probable time, we want to know. We have to satisfy the people. We have come here to represent the grievances of the people. They are asking us 'what is to be done?'.

MR. SPEAKER: Probable time சொல்ல முடியாது. உலக வங்கித் திட்டம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லி இருக்கிறார். அது எப்போது முடியும் என்று எப்படி இப்போதே சொல்ல முடியும்?

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, வில்லிவாக்கத்தில் பாதாளச் சாக்கடை திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். பொதுவாக வில்லிவாக்கம் மழையால் பெரிய அளவில் சுகாதார வசதியில் சீர்கேடு அடைந்து ரோடுகளில் கொசு உற்பத்தியாகி சென்னை மாநகரத்திற்கே கொசு சப்ளை ஆகும் ஒரு நிலைமை அங்கே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு இரவு தங்கினால் அந்தக் கொடுமையை உணர முடியும். ஆகவே சென்னை மாநகரம் பூராவிற்கும் ஒரு திட்டம் ஆராய்ச்சியில் இருப்பதாகச் சொல்கிறார்களே, அந்த ஆராய்ச்சி முடிந்த பின்னர் அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது வில்லிவாக்கத்திற்கு முதலிடம் தந்து ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இது சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் சென்னை நகருக்கு வெளியே சென்னை புறநகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் போடப்பட்டுள்ள மாபெரும் திட்டம். இதில் எது முன்பு எது பின்பு என்று சொல்வதற்கு இயலாது.

மடிச்சல் கால்வாய்த் திட்டம்.

*வினா எண் 69—திரு. டி. மணி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளவங்கோடு தாலூகாவில் மடிச்சல் கால்வாய் வெட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்காக அரசு நவம்பர் 1978-ல் ரூ. 18.10 லட்சம் அனுமதி அளித்தது. ஆனால் கேரள அரசுடன் இம்மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தப் படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் கொடுப்பதற்கு பதிலாக தற்போது வினாடிக்கு 80 கன அடி தண்ணீர்தான் கேரள அரசு நொய்யாறு அணையிலிருந்து கொடுக்கிறது. மேலும் ஆயக் கட்டுதாரர்கள் போதிய தண்ணீர் கிடைக்காததால் தங்கள் நிலங்களை மேம்படுத்த முன் வரவில்லை. ஆகையால் இது பற்றி மறு ஆய்வு செய்து ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும் என தெரியும் வரை இத் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, நொய்யாற்றில் இருந்து மடிசல் கால்வாய்க்கு வருகின்ற 150 கன அடி தண்ணீர் ஒப்பந்தப்படி கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு கேரள அரசிடமிருந்து கேட்டு வாங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளதா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே அது முறையாக கேரள அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதிகாரிகள் மட்டத்திலும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு இருக்கின்றன. விரைவில் ஒப்பந் தப்படி தண்ணீர் பெறுவதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, அந்த ஒப்பந்தம் நிறைவேறினால் இந்தக் கால்வாய் வெட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர் களே, 24—11—1978-லேயே 18.10 லட்சம் ரூபாய்க்கு நாம் செலவிற்கான அனுமதியைக் கொடுத்து இருக்கிறோம். ஒப்பந்தம் ஏற்பட்ட உடனே பணி துவங்க வேண்டியது தான். அதிலே காலதாமதம் இல்லை.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, எத்தனை ஏக்கர் நிலங்கள் இதனால் நீர்ப்பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர் களே, இந்த 150 கன அடி தண்ணீர் தமிழகத்திற்குக் கொடுக் கும் ஒப்பந்தம் முடிந்த பிறகு முழுமையான தகவல்கள் தெரி விக்கப்படும்.